இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 223 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 11 – ஞாயிற்றுக்கிழமை 24 மார்ச் 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 223 : Thiruvalluvar Year - 2055 - Panguni 11 - Sunday 24 March 2024 - Chennai 16 Pages ₹ 5.00

## இந்திய நாட்டுக்குள் ஆக்கிரமிப்பு செய்யும் நாடுகளைவிடச் சொந்த நாட்டு விவசாயிகள்தான் பிரதமர் மோடியின் கண்ணுக்கு எதிரிகளாகத் தெரிகிறார்கள்!

# இனியும் மோடி ஆட்சி தொடர்வது, தமிழ்நாட்டுக்கு அழிவு!

## கொரடாச்சேரியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முழக்கம்!



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.3.2024) திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரியில் நடைபெற்ற இந்தியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில், தஞ்சாவூர் தொகுதி வேட்பாளர் ச.முரசொலி அவர்களையும், நாகப்பட்டினம் தொகுதி வேட்பாளர் வை.செல்வராஜ் அவர்களையும் அறிமுகப்படுத்தி, இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, அமைச்சர் பெருமக்கள் எஸ்.இரகுபதி, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, முனைவர் டி.ஆர்.பி.ராஜா, டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராமலிங்கம், செல்வராஜ், பழனிமாணிக்கம், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழகச் செயலாளர்கள் பூண்டி கலைவாணன், துரை சந்திரசேகரன், அண்ணா துரை, கௌதமன் மற்றும் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் உள்ளனர்.

**சென்னை, மார்ச் 24–**

**இந்திய நாட்டுக்குள் ஆக்கிரமிப்பு செய்யும் நாடுகளைவிடச் சொந்த நாட்டு விவசாயிகள்தான் பிரதமர் மோடியின் கண்ணுக்கு எதிரிகளாகத் தெரிகிறார்கள் என்றும், இனியும் மோடி ஆட்சி தொடர்வது, தமிழ்நாட்டுக்கு அழிவு என்றும் கொரடாச்சேரியில் நடைபெற்ற இந்தியா கூட்டணி மக்களவை தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் தஞ்சை வேட்பாளர் ச.முரசொலி, நாகை வேட்பாளர் வை. செல்வராஜ் ஆகியோருக்கு வாக்கு சேகரித்து நடைபெற்ற மாபெரும் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் கழகத்தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.**

**கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் உரை வருமாறு:**

"நானும் டெல்டாகாரன்" என்ற பெருமையோடு, சொந்த மண்ணுக்கு வந்திருக்கிறேன்! தலைவர் கலைஞர் பிறந்த திருக்குவளை - வளர்ந்த திருவாரூர் - வென்ற தஞ்சாவூர் - உள்ளடங்கிய நாடாளுமன்றத் தொகுதிகளான தஞ்சாவூர், நாகப்பட்டினம் தொகுதிகளுக்கு வந்திருக்கிறேன்.

உங்களில் ஒருவனாக - உங்களிடம் உரிமையோடு வாக்கு கேட்டு வந்திருக்கிறேன். தலைவர் கலைஞர் அவர்களின் மகனாக வாக்கு கேட்டு வந்திருக்கிறேன்.

இந்தியாவின் வரலாற்றில் புதிய அத்தியாயத்தை எழுத கூடியிருக்கும், இந்த எழுச்சிமிகு பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் பங்கெடுத்துள்ள அனைவருக்கும் வணக்கம்.

என் உரையைத் தொடங்குவதற்கு முன்பு, இந்தப் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தை பிரம்மாண்டமாக மாநாடுபோல் ஏற்பாடு செய்திருக்கும் ஆற்றல்மிகு பொறுப்பு அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், நிர்வாகிகள் என அனைவருக்கும் மனம் நிறைந்த பாராட்டுக்கள், வாழ்த்துகள்.

### முத்தமிழறிஞரின் மூத்த பிள்ளை முரசொலி!

இந்திய நாடாளுமன்றத்திற்கு, ஏப்ரல் 19-ஆம் தேதி முதல்கட்டமாகத் தேர்தல் நடைபெற இருக்கிறது. தஞ்சை தொகுதி வாக்காளர்கள் - நம்முடைய வெற்றி வேட்பாளர் முரசொலிக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும். முரசொலியைப் படித்து வளர்ந்தவன் நான். இன்றைக்கு முரசொலி என்ற பெயர் வைத்திருக்கும், வேட்பாளருக்கு வாக்கு கேட்டு வந்திருக்கிறேன். முரசொலி தலைவரின் மூத்த பிள்ளை! அந்த மூத்த பிள்ளைக்கு வாக்கு கேட்க, உங்கள் வீட்டுப் பிள்ளையான இந்த ஸ்டாலின் வந்திருக்கிறேன்.

ஒன்றியச் செயலாளராகப் பணியாற்றும் தம்பி முரசொலி, நாடாளுமன்றத்திற்கு செல்வது எனக்கு மிகுந்த மனநிறைவைத் தருகிறது.

அதே மகிழ்ச்சியோடுதான், பகத்சிங் போன்ற விடுதலை வீரர்கள் நிறைந்த கம்யூனிஸ்ட் தோழர்களை ஒருங்கிணைக்கும் தோழமையின் இலக்கணம், அண்ணன் முத்தரசன் அவர்களின் ஆதரவு பெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளரான தோழர் வை.செல்வராஜ் அவர்களுக்கு கதிர் அரிவாள் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று நாகை தொகுதி வாக்காளர்களைக் கேட்க வந்திருக்கிறேன்.

### ஜனநாயகத்தை முடிவு செய்யும் தேர்தல்!

நடைபெற இருக்கும் தேர்தல் மிகமிக முக்கியமான தேர்தல். ஏதோ பா.ஜ.க., ஆட்சியை வீழ்த்துவதற்கான தேர்தலாக மட்டும் யாரும் இதை நினைத்துவிடக் கூடாது. இந்தியாவில் இனி ஜனநாயகம் இருக்க வேண்டுமா, வேண்டாமா என்று முடிவு செய்வதற்கான தேர்தல் இது!

இந்தியாவின் மாநிலங்களை - மக்களாட்சியை, மதச்சார்பின்மையை, பன்முகத்தன்மையை, ஒடுக்கப்பட்ட மக்களை, ஏழை-எளிய மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்றால், பா.ஜ.க., இன்னொரு முறை ஆட்சிக்கு வரக் கூடாது. பா.ஜ.க., மீண்டும் ஆட்சிக்கு வந்தால், இந்தியா என்ற கூட்டாட்சி அமைப்பே இருக்காது.

தொடர்ச்சி 3- ஆம் பக்கம்

**நேற்று** *அ.தி.மு.க. தேர்தல் அறிக்கை வெளியிட்டு இருக்கிறார்கள்! ஆட்சிப் பொறுப்பு கையில் வைத்திருந்தபோது, மக்களுக்கு ஒன்றுமே செய்யாத பழனிசாமி - ஒன்றிய அரசில் பா.ஜ.க.-வுடன் சேர்ந்து, தமிழ்நாட்டுக்கு எந்த நன்மையும் செய்யாமல், துரோகங்களை மட்டுமே செய்த பழனிசாமி - அவர் பங்கிற்கு ஒரு தேர்தல் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.*

## நாடாளுமன்றத் தேர்தல் – கழகத் தலைவர்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் நாளைய பிரச்சாரம்!



2024 ஏப்ரல் 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரித்து வருகிறார்.

கழகத் தலைவர் அவர்கள் மேற்கொள்ளும் நாளைய தேர்தல் பிரச்சாரப் பயண விவரம் :-

| தேதி | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|
| 25.03.2024 (திங்கட்கிழமை) - | கன்னியாகுமரி, திருநெல்வேலி |

